மலர் 1 இதழ் 2 அக்டோபர், 2016 ISSN : 2454-3993

# அப்துல்ரகுமான் கவிதைகளில் இறைக்கோட்பாடு

முனைவர் இராம.மோகன்
உதவிப் பேராசிரியர்,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி

இலக்கியம் எந்த வடிவத்தில் தோன்றினாலும் அது சமகாலத்தின் வாழ்வியல் கூறுகளை வெளிப்படுத்தும்போது போற்றப்படுகிறது. கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதைப் படைப்புகள் மனித சமூகத்தின் அடையாளங்களாகத் திகழ்கின்றன. "இவருடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துவிட்டால் யார் இந்த கவிஞர்? என்று உலகம் விசாரிக்கும்" என்பார் கவியரசர் கண்ணதாசன். இவருடைய முதல் படைப்பான பால்வீதி (1974) தொடங்கி பூக்காலம் (2011) வரை அப்துல் ரகுமான் தொடாத எல்லைகள் இல்லை. காதல், கல்வி, வாழ்வியல், சமூகம், அறம், தத்துவம் என இவருடைய விரிந்த கவிதைப்பரப்பில் மதங்களைக் கடந்து இறைச் சிந்தனைகள் விரவிக்கிடக்கின்றன. மத வேறுபாடுகளைக் கடந்த "இறைவன் ஒருவனே" எனும் உண்மைத் தத்துவத்தை தம் படைப்புகளில் பறைசாற்றியுள்ளார். எம்மதமாக இருப்பினும் இறுதியில் மனிதன் பெற வேண்டியது "இறைச்சங்கமம்" மட்டுமே என்பதை ஆழ்ந்த அறிவோடும் அக்கரையோடும் கவிக்கோ தம்படைப்புகளில் எடுத்துக் காட்டியுள்ளார்.

## இறைவன் ஒருவனே

மனிதனை உண்மையான பாதையில் செலுத்துவதே ஆன்மீகம். "சமயங்கள் பலவாயினும் இறைவன் ஒருவனே, நதிகள் பலவாயினும் சங்கமிக்கும் இடம் ஒன்றுதான்" என்னும் உயரிய ஆன்மிகச் சிந்தனையை,

"எந்த சாரளத்தை
எப்போது திறந்தாலும்
தெரிவது உன் முகம் தான்"

(மின்மினிகளால் ஒரு கடிதம் ப.104)

எனும் கவிதை அடிகளில் புலப்படுத்துகிறார் கவிக்கோ. இதே போன்று

"நீ பல்லவி
நான் சரணம்

இறுதியில்
உன்னிடம் வந்துதான்" (மின்மினிகளால் ஒரு கடிதம் ப.60)

எனும் கவிதை அடிகளில் எந்த மதத்தில் பிறந்த ஒருவனும் சென்று அடையும் கதியிடம் இறைவனின் திருவடியே என்னும் உண்மை முடிவினை எளிமையான குறியீட்டின் வழியாகப் புலப்படுத்துகிறார். பூக்கள் வேறுவேறாக இருக்கலாம் ஆனால் எந்த பூவிலும் சுரப்பது தேன் மட்டுமே மதங்கள் பலவாக இருக்கலாம் எல்லா மதத்திற்கும் இறைவன் ஒருவனே என்னும் மத நல்லிணக்கக் கருத்தை,

" ஒவ்வொரு பூவிலும்
தேனாகச் சுரப்பது
நீதான் (மின்மினிகளால் ஒரு கடிதம் ப.74)

எனும் கவிதை அடிகளில் கவிஞர் எளிமையாகச் சொல்லியிருக்கிறார்.

மதம் என்ற பெயரில் மக்கள் தங்களுக்குள் பிரிவு கொண்டு சண்டையிட்டுக் கொள்வதை "அறியாமையின் உச்சம்" எனக் கடிகிறார் கவிக்கோ. மதக்கலவரங்களை மடச்செயல் எனக்கூறி ஆதங்கப்படுகிறார்.

"கரைபுரண்டு ஓடும்
ரத்த வெள்ளத்தில்
மூழ்கிவிட்டன
ஆலயங்களும்
மசூதிகளும்" (பறவையின் பாதை ப.69)

எனும் கவிதையில் மதக்கலவரங்கள் மதங்களையே அழித்துவிடும் என எச்சரிக்கிறார்.

"இடிபாடுகளில்
வித்தியாசம் தெரியவில்லை
கோபுரத்துக்கும்
மினராவுக்கும்" (பறவையின் பாதை ப.26)

எனும் கவிதை அடிகளில் மதச்சண்டைகளால் ஆலயங்கள் அழிக்கப்படுவதை வருத்தத்தோடு பதிவு செய்துள்ளார் கவிஞர். இடிக்கப்பட்ட பிறகு உடைந்த செங்கல் துகள்கள் கோபுரத்தின் மிச்சமா? அல்லது மசூதியின் மிச்சமா? அப்போது எந்த அடையாளத்தையும் காண இயலாது. எனவே மதச்சண்டைகளால் ஆலயங்களை சிதைக்கக்கூடாது என்பதை தம் கவிதை ஆளுமையால் துணிவோடு எடுத்துக் காட்டியுள்ளார் கவிக்கோ.

"ஆலயமணி ஓசையும்
மசூதியின் அழைப்பொலியும்
காற்றில் கரைந்து சங்கமிக்கும் அர்த்தம்
இவர்களுக்கு எப்போது விளங்கும்" (பால்வீதி ப.29)

எனும் கவிதையடிகளில் கவிஞரின் தெளிந்த ஞானம் வெளிப்படுகிறது. இறைவன் ஓசை வடிவகாகவும், ஒளிவடிவாகவும் இருப்பவன், ஓசை எழும் இடங்கள் வேறுபடலாம் ஆனால்

ஒலி வேறுபடுவதில்லை. எம்மதமாயினும் இறைவனின் அருள் ஒன்றுதான் என்பதை மேற்கண்ட கவிதை அடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

"நீ அன்பு" "நீ சாந்தி" "நீ ஆனந்தம்" "நீ சுந்தரம்"
"நீ உண்மை" "நீ ஒளி" (பால்வீதி ப.28)

என்னும் கவிதை தொடர்களில் இறைவனின் அருள் வடிவங்களை உருவகப்படுத்துகிறார் கவிஞர்.

"இதோ என்று இறைவனை காட்ட/ அவன் மனித வடிவம் அல்ல/ இந்த பிரபஞ்சத்தின் எஜமான் அவனுடைய பண்புகளே படைப்புகளாக வெளிப்படுகின்றன்" (மகரந்தச்சிறகு ப.57) என்னும் கவிதையில் "உலகத்தின் தலைவன் இறைவன்" என்பதை அறியக் காட்டியுள்ளார். "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" (திருவாசகம்) என்னும் திருவாசக அடிகளில் இறைவன் எல்லா வடிவமாகவும் இருக்கிறான் என்றும் தனக்கென ஒரு பெயரும் வடிவமும் அற்றவன் என்பதை விளக்கியுள்ளார் மாணிக்கவாசகர். இக்கருத்தோடு மேற்கண்ட அப்துல் ரகுமான் கவிதையடிகள் ஒத்துப்போவதை அறியலாம்.

"சோதிய சுடரே சூழ் ஒளி விளக்கே" (திருவாசகம்: அருள்பத்து பா.1) எனும் திருவாசகப் பாடலடி இறைவன் சோதி வடிவானவன் ஒளிவடிவானவன் என்பதை விளக்கிக் காட்டுகிறது. இறைவனை "அருளார் அமுதக்கடல்" (திருவாசகம்: பிராத்தனைபத்து பா.2) என்று மாணிக்கவாசகர் போற்றுவதையும் அறியலாம். எனவே எம்மதமாக இருப்பினும் அருள் கடலாக விளங்குபவன் இறைவன் என்பதை ஒப்புக்கொள்வதே மத நல்லிணக்கத்திற்கு வழியாகும்.

**நான் என்னும் ஆணவம் ஒழிய வேண்டும்**

"யான்எனது என்னும்செருக்கு அறுப்பனான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்" (குறள்.346)

என்பார் வள்ளுவர். யான் எனது என்னும் ஆணவத்தை ஒழித்தால் மட்டுமே இறைவன் உலகம் கிட்டும் என்பது இக்குறனின் எளிய பொருளாகும். இவ் உண்மையை,

"அகங்காரம் என்ற கிரீடத்தைச்
சூட்டிக் கொள்கிறவனே
உனக்கு ராஜ்ஜியம் இல்லாமல் போகிறது" (ஆலாபனை ப.133)

எனும் கவிதையில் அப்துல்ரகுமான் விளக்கிக்காட்டுகிறார்.

ஒரு மனிதனை நான் என்னும் ஆணவமே கீழ்மைப்படுத்துகிறது என்பதை கவிக்கோ அப்துல்ரகுமான் பல்வேறு கவிதைகளில் தோலுரித்துக் காட்டியுள்ளார். நான் என்பது ஒரு கூண்டு அதற்குள் நீ அடைக்கப்பட்டால் சத்தியம் என்ற இறை உணர்வை பெற முடியாது என்னும் அடிப்படை உண்மையை,

"நான் என்பது கூண்டு
அதற்குள் அடைப்பட்ட பறவையாக
நீ இருக்கும் வரை

பறந்த வானத்தில்
பறந்து திரியும் சுகத்தை
அறிந்து கொள்ள மாட்டாய்
"நான்" என்பது இமை
அது உன் கண்களுக்கு
மறைப்பாகவும்
தூக்கமாகவும்
இருக்கிறது
இந்த இமையைத்திறப்பவனே
விழித்தவன் ஆகிறான்
அவனே சத்தியத்தை தரிசிக்கிறான்
.........................................................
காதலை மட்டும் அல்ல
கடவுளை வாங்குவதற்கும்
நான் என்பது தான் விலை" (ஆலாபனை பக்.134-135)

என்னும் கவிதை அடிகளில் எளிமையாகப் புலப்படுத்தியுள்ளார்.

**பேதம் ஒழிய வழி**

"நீ மேலே உயர உயர
மண்ணின் பேதங்கள்
மறையக் காண்பாய்" (ஆலாபனை ப.64)

என்னும் கவிதை அடிகளில் சிறுமையான குணங்களை நீக்கிவிட்டு மனிதன் பரந்த உள்ளத்தைப் பெறவேண்டும் என்றும், சுயநலம் அற்ற பரந்த உள்ளமே மத பேதங்களை ஒழிக்கும் என்பதையும் வெளிப்படையாகக் கவிக்கோ குறிப்பிட்டுள்ளார். மேலே உயர வேண்டும் என்றால் அதற்கான வழி அங்கேயே இருக்கிறது என்பதை

"கீழே இறங்கும் ஆசைகொள்
மேலே உயர்வாய்" (ஆலாபனை ப.65)

என்னும் கவிதை அடிகளில் சுட்டிக்காட்டுகிறார். கீழே இறங்குதல் என்பது குறியீடாகும். இதற்கு எளிமை அல்லது "ஆணவம் அற்ற நிலை" என்பதாகப் பொருள் கொள்ள வேண்டும். பேதம் ஒழிய வேண்டும் என்றால் மத வேறுபாடுகளைக் களைய வேண்டும் மத வேறுபாடுகளைக் களைய மத நல்லிணக்க உணர்வு வேண்டும் என்னும் கவிஞரின் உயர்ந்த எண்ணம் போற்றப்பட வேண்டும்.

**ஆண்டாளைப் போற்றும் கவிஞர்**

ஆண்டாளையும் போற்றும் மத வேறுபாடு அற்ற சிந்தனையைக் கவிஞரிடம் காண முடிகிறது.

"ஆண்டாள் பிஞ்சில் பழுத்தவர்
அவர் ஞானப்பெண்
பத்து ஆழ்வார்களுக்கு
ஒரு பெண்ணாய் வந்தவர்
அதனால் பத்து பேருடைய
ஞானத்தையும் சீதனமாகப் பெற்றவள்" (கடவுளின் முகவரி ப.119)

என்னும் கவிதையில் வைணவ மதத்தைச் சார்ந்த ஆண்டாளைப் புகழ்ந்து பாடுகிறார். தலைவன், தலைவி பாவணையில் இறைவனை விரும்பி அடைந்தவள் ஆண்டாள். "எல்லாக் கலாச்சாரக் கட்டுமானங்களையும் ஆண்டாள் தகர்த்தெறிகின்றாள்" என்பார் அறிஞர் செல்வி. (தமிழ் வரலாற்றுப்படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு ப.56) ஆண்டாள் பின்பற்றிய இறைக்காதல் வழியைக் அப்துல் ரகுமான் பல இடங்களில் தம் கவிதைகளில் போற்றியுள்ளார். அல்லாவைப் படித்தவர் ஆண்டாளையும் படித்திருக்கிறார். கவிஞனுக்கு மதங்கள் கிடையாது. தான் எட்டிய இத்தகு உயர்ந்த இறைஞானத்தைப் பொதுமைப்படுத்தியவர் கவிக்கோ. காதலைத் தெய்வீக நெருப்பு (ஆலாபனை ப.126) என உருவம் செய்துள்ளார். மேலும் சாத்தானின் சன்னதி என்ற கவிதையில்

"காதல் உங்களுக்குள் இருக்கும்
தெய்வீகத்தை வெளிப்படுத்துகிறது" (ஆலாபனை ப.128)

என்னும் அடிகளில் காதல் உணர்வு தெய்வீகத்தை வெளிப்படுத்துவதாகக் குறிப்பிடுகிறார். எந்த பொருளைப் பாடினாலும் தெய்வீகத்தோடு முடிப்பது கவிஞரின் உத்திகளுள் ஒன்றாகும்.

**முடிபுகள்**

1. மதம் கடந்து இறை உணர்வை எல்லா மக்களுக்கும் பொதுமையாக்கிப் பாடியவர் கவிஞர் அப்துல்ரகுமான்.
2. சமய நல்லினக்கமே சமூக ஒற்றுமைக்கு வழிவகுக்கும் என்பதை வலியுறுத்துகிறார்.
3. இறைவன் ஒருவனே அவன் நாம்போற்றும் வடிவத்தில் உள்ளான்.
4. நான் எனது என்னும் ஆணவம் ஒழிந்தால் இறை அனுபவத்தைப் பெறலாம்.
5. மத உணர்ச்சியால் மதக்கலவரங்களைக் தடுக்க இயலாது மனித ஒற்றுமையால் நல்லிணக்கம் பெறலாம்.
6. இறைகதி என்பது எல்லா மக்களுக்கும் உரிய பொதுவான இறைக்கோட்பாடாகும். முதலான இறைமைச் சிந்தனைகள் கவிக்கோ அப்துல்ரகுமான் கவிதைகளில் தனித்துவம் பெற்றுள்ளன.